2013 ஏப்ரல் 1]

அதன் தொடர்ச்சியாகத்தான் இந்த நிதிநிலை அறிக்கையில்கூட 8,580 கோடி ரூபாயிலே 1,678 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை ஆறு வழிச் சாலைகளாகவும், நான்கு வழிச் சாலைகளாகவும் மாற்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தங்கள் கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்விலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பின், அங்கே சாலைகளை விரிவுபடுத்துவதற்கு அரசு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

112—

கால்நடைத் தீவனங்கள்

***227**—**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் தீவனங்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மானிய விலையில் விநியோகம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் கால்நடைத் தீவனமானது ஈரோடு கால்நடைத் தீவன அலகில் உற்பத்திச்

செய்யப்படுகிறது. உற்பத்தி விலை ரூ.16.76 என இருந்தாலும், அதற்கும் குறைந்த விலைக்கே ரூ.15.90–க்குக் கொடுக்கப்படுகிறது. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்மூலம் மத்திய அரசு சார்ந்த நிறுவனமான இந்தியன் பொட்டாஷ் நிறுவனத்திடமிருந்து கால்நடைத் தீவனம் வாங்கப்பட்டு, இலாப நோக்கு இல்லாமல், அதே விலைக்கே கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இது சந்தையிலுள்ள மாட்டுத் தீவன விலைகளைவிட, மிகக் குறைந்த விலையாகும். எனவே, மானிய விலையில் கால்நடைத் தீவனம் வழங்க இயலாத நிலை உள்ளது.

மேலும், எதையும் கேட்காமலேயே கொடுப்பவர்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில்கூட பருவமழை பொய்த்தது. நமக்கு வரக்கூடிய காவேரி நீரை கர்நாடக அரசு தர மறுத்தது. மழை பொய்த்தாலும், கர்நாடக அரசு தண்ணீர் தர மறுத்தாலும், மத்திய அரசு தமிழகத்தை வஞ்சித்தாலும், உச்ச நீதிமன்றம் சென்று டெல்டா மாவட்டங்களுக்கு காவேரி நீரைப் பெற்றுத் தந்த ‘காவேரித் தாய்’, எங்கள் அம்மா அவர்கள். மேற்கூறப்பட்ட வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுத்ததோடு மட்டுமல்லாது, வாயில்லா கறவை மாடுகளுக்கு தீவனப் பற்றாக்குறையைப் போக்கவும், பால் உற்பத்தி குறையக்கூடாது என்பதைக் கருத்தில்கொண்டும், பால் உற்பத்தி செய்யும் சங்கங்களைச் சார்ந்த 3,67,874 விவசாயிகள் பாதிக்கப்படாவண்ணம் கால்நடைத் தீவனம் கிலோ ஒன்றுக்கு ரூ.4/– மானியமாக வழங்க, ரூ.11 கோடியே 62 ஆயிரத்தை வழங்கியது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.

மேலும், தாது உப்புக் கலவை நாள் ஒன்றுக்கு 50 கிராம் வீதம் கறவை மாடுகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.25/– மானிய விலையில் வழங்க, ரூபாய் 3 கோடியே 38 ஆயிரத்தை வழங்கியது. ஆக மொத்தம், கால்நடைத் தீவனத்திற்காக ரூபாய் 15 கோடியை மானியத் தொகையாக வழங்கியுள்ளது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

2013 ஏப்ரல் 1]

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதி, மலைவாழ் மக்கள் மற்றும் விவசாய கூலித் தொழிலாளர்கள் அதிக அளவில் வாழ்ந்துவரும் பகுதியாகும். அவர்கள் ஆடு, மாடு ஆகிய கால்நடைகளை வளர்த்து வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். நோயாளிகள், குழந்தைகள், முதியோர் ஆகிய அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பால் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகிறது. தற்போது கால்நடைப் பராமரிப்பிற்கு ஆகும் செலவுகள் அதிகரித்ததுள்ளதாலும், கடுமையான வறட்சி இன்றைக்குக் குமரி மாவட்டத்தில் நிலவி இருக்கின்ற காரணத்தினாலும், கால்நடை வளர்ப்போர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஏழை கால்நடை வளர்ப்போரை மனதில்கொண்டு, இலவசமாக கால்நடைத் தீவனங்களை வழங்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதுபோல, அதாவது உற்பத்தி விலைக்கே, குறைவான தொகைக்குத்தான் கால்நடைத் தீவனம் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10—40

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு 15 கோடி ரூபாய் மானியம் கொடுத்துள்ளார்கள். மேலும், மற்ற மாவட்டங்களிலும் வறட்சி உள்ளதா என்பதைப் பார்ப்பதற்காக, மாண்புமிகு அமைச்சர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அப்படி வறட்சி இருந்தால், அங்கேயும் மானியம் தரப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆதலால், விவசாயிகளுடைய வாழ்விலே மிகுந்த அக்கறை கொண்டவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எனவே, அதையும் ஆய்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்குவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதி, சடையமங்கலத்தில் கட்டி முடித்துச் செயல்படாமல் இருந்துவரும் கால்நடைக் கிளை நிலையத்தில், கால்நடை மருத்துவரை நியமனம் செய்து, அந்தக் கால்நடைக் கிளை நிலையத்தை உடனடியாக செயல்படச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *கால்நடை மருத்துவ நிலையம் என்பது கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்தது. இருந்தாலும், பால் வளத் துறையின் சார்பாக கால்நடைகளைப் பராமரிப்பதற்காக நடமாடும் மருத்துவ மையம் அமைத்து, மருத்துவரை நியமித்து, அதன் மூலமாகக் கால்நடைகளைப் பராமரித்து வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

113—

இணைப்புக் கால்வாய்

***6531—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, பாப்பாரப்பட்டியிலுள்ள ஆற்று மேம்பாலம் அருகில் தடுப்பணை கட்டி, பாப்பாரப்பட்டி ஏரிக்கு இணைப்புக் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?